தமிழ் நாடு சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1971 மார்ச் 30.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. அறிவிப்பு

வினா-விடை நேரம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றும் மாண்புமிகு அமைச்சர்கள் விடை பிறுப்பதற்கான வினாக்கள் இல்லை.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்

தாழங்குப்பத்தில் மூன்று தி.மு.க. தொண்டர்கள் கொலையுண்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கீழ்க்கண்ட பொருள் குறித்து ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள் :

The gruesome murder of three D.M.K. volunteers in Thazhankuppam near Madras.

இது ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குரிய விதி முறைகளின்கீழ் எப்படி வரும் என்ற விவரத்தைமட்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மிஸ்டர் ஸ்பீக்கர், ஸார், இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை நான் கொண்டுவந்து உங்களுடைய அனுமதி வேண்டுமென்று கேட்பதற்கு முக்கியமான காரணங்கள் உண்டு. இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்கக்கூடிய இந்தச் சம்பவம் ஒரு முக்கிய மான சம்பவம் என்றும், கவலைக்குரிய ஒரு சம்பவம் என்றும், சமீபத்திலே நடந்தொரு சம்பவம் என்றும், இதைச் சாதாரண ஒரு சட்டப் பிரச்சினை யாகப் பார்க்கக் கூடாது என்றும் நான் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்தச் சபை ஆரம்பித்த காலம் முதற்கொண்டே, தேர்தலுக்குப் பின்னால் பல சம்பவங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைப்பற்றிச் சபைமுன் கொண்டு வரப்பட்டது. அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சில வாக்குறுதி களைக் கொடுத்தார்கள். ஆனால், இந்தப் பத்திரிகைச் செய்தியை உங்களுக்கு நான் அனுப்பியிருக்கிறேன். தினத்தந்தி 28-ந் தேதி சென்னைப் பதிப்பிலே 5-ம் பக்கத்தில் இந்தச் செய்தி குறிப்பிடப்பட்டிருக்கிறது. சென்னைக்கு அருகாமையில் இருக்கக்கூடிய ஒரு குப்பத்தில் நடந்த இந்தச் சம்பவம்பற்றி நானும் விசாரித்தேன். இறந்துபோனவர் ஒருதொழிலாளி. அவர் காலையில் வேலைக்குச் செல்வதற்கு முன்னால் அவரைத் தாக்கியிருக்கின்றார்கள். பின்பு தாக்கிய அதே கூட்டம், வேறு சிலரையும் தேடிச் சென்றதைப் பார்த்தால் இதில் அரசியல் நோக்கம் இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.